# சைவம், சிவம் என்பதன் பொருள்

- சைவம் என்பது - சிவ சம்பந்தமுடையது.
- கடவுள் என்பதன் பொருள் - யாவர் உணர்வையும் கடந்தவர்.
- இறைவன் என்பதன் பொருள் - எப்பொருளிலும் தங்குபவன்.
- முதல்வன் என்பதன் பொருள் - எப்பொருளுக்கும் முற்பட்டு அதனை தொழிற்படுத்துபவன்.
- சிவம் என்பது - செம்பொருள் என்ற சொல்லைக் குறிக்கும்.
- 'பெண்ணாண் அலியெனும் பெற்றியன் காண்க" - திருவாசகம்.
- திருஞானசம்பந்தர் பௌத்தர்களை வாதில் வென்ற இடம் - திருதெளிச்சேரி
- 'பாசமாம் பற்றறுக்கும் ஆரியனே" - திருவாதவூராரின் திருவாசகம்.
- 'தெய்வமே சிவமே, சிவனருள் சைவம் சிவத்தொடு சம்பந்தம்" - திருச்சிற்றம்பலநாடிகள் வாய்மொழி.
- 'ஓரல் நீழல் ஒன்கழல் இரண்டும்" - திருஞானசம்பந்தர் எழுதிய திருமொழிப்பாடல்.
- சிந்து சமவெளி நாகரிகம் இன்றிலிருந்து - சுமார் ஐந்தாயிரம்(5000) ஆண்டுகளுக்கு முற்பட்டது.
- ஹரப்பா என்னுமிடத்தில் முதன்முதலில் ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிட்டவர் - சர் ஜான் மார்ஷல்.
- 'இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்" - காஞ்சிப்புராணம்
- சமட்டி நிலை என்பது - முழுமுதல் இணைந்தது எனப் பொருள்படும்.
- வியட்டி நிலை என்பது - பிரிவு நிலையைக் குறிக்கும்.
- 'சத்" என்ற சொல் குறிப்பது - சிவபெருமான்.
- 'சத்தாகிய ஒன்றே முதற்கண் உலகத் தோற்றத்தின் முன் அத்விதீயமாய் இருந்தது" - சாந்தோக்ய உபநிஷத்.
- 'ஒருவன் உருத்திரனே, இரண்டாவதொன்றைக் கொள்வார் அல்லர்" - சுவாதாசுவர உபநிஷத்.
- 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க" - மாணிக்கவாசகர்.
- 'ஒளி மணிவண்ணன் என்கோ! நளிர்மதிச் சடையன் என்கோ!" - நம்மாழ்வாரின் திருவாய்மொழி.
- சக்தியும் சிவனும் சத் எனும் சொல்லின் பகுதி விகுதிகளாக ஓதப்படுகிறார்கள்.
- 'தம்மலர் அடியொன்று அடியவர் பரவ" - திருஞானசம்பந்தர்.
- சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை தோன்றிய காலம் - சங்க காலத்தின் இறுதியில்.
- சுடலையாடி என அழைக்கப்படுபவர் - சிவபெருமான்.
- 'உலகம் யாவும் யாண்டு ஒடுங்கும், அவை ஆண்டு நின்றே தோன்றும்" - கலித்தொகை.
- 'ஒடுங்கி மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்" - சிவஞானபோத முதற் சூத்திரம்.
- "மலர்தலை உலகத்து மரபு நன்கறியப் பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து" -

தொல்காப்பியரின் காஞ்சித்திணையின் பொருட்பகுதி.

- ‘ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணினில் சிந்தை நாடி” - சிவஞான போத ஒன்பதாம் சூத்திரம்.
- தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய நூல்கள் - நான்கு வேத நெறியினையும், நான்மறை வழக்கையும் தழுவி அமைந்துள்ள நூல்களாகும்.
- ‘தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” - மாணிக்கவாசகர்.
- கங்கையும் யமுனையும் இணையுமிடம் - பிரயாகை.
- ‘தேவர் குறளும் திருநாள் மறைமுடியும்” - ஔவையாரின் நல்வழி.
- நான்கு வேதங்களின் முடிபு என அழைக்கப்படுவது - உபநிடதங்கள்.
- சைவ சமயத்தின் பழங்கால பெயர்கள் - திருநெறி, மெய்நெறி, முன்நெறி, சிவமாநெறி.
- ஆரியர்கள் சிந்து நதிக்கரையில் வசித்தபோது அவர்களை ‘இந்துக்கள்” என அழைத்தவர்கள் -- பாரசீகர்கள் மற்றும் கிரேக்கர்கள்.
- ஹிந்து என்பதன் பொருள் -- ஹிம்சையில் துக்கிக்கின்றவன்
- பிற உயிர் துன்புறும்போது அத்துன்பம் தமக்கு நேர்ந்தது போல் வருந்துபவன் - இந்து.
- அன்பே சிவம் எனக் கூறுவது - இந்து மதம்
- இந்து மதத்தின் வேறுபெயர்கள் -- சநாதனதர்மம், திருநெறி, தவநெறி, அருள்நெறி, அன்புமதம் ஆகியன.
- ‘சநாதனதர்மம்” என்பதன் பொருள் -- அழிவிலா அறம்.
- பழமையான மதம், உலக மதங்களுக்கு தாய் - இந்து மதம்.
- ‘இந்து மத இணைப்பு விளக்கம்” ‘இந்து மத இணைப்பு விளக்கம எனும் நூலை எழுதியவர் - மகாவித்துவான் ஆறுமுக நாவலர்.

WhatsApp Group -ல் சேர – கிளிக் செய்யவும்

Facebook Examsdaily Tamil – FB ல் சேர – கிளிக் செய்யவும்

Telegram Channel கிளிக் செய்யவும்